**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 194/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயராணி | த–பெ /க.பெ. | விமல்ராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டெய்லரிங் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**10.06.2026**
**குறுக்கு விசாரணை:**

1) நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால்அரியக்குடியில் வசித்து வருகிறேன். எதிரி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் 4–5 வருடங்ககளுக்கு முன்பு தெற்கு தெருவில் இருந்தார் தற்போது PKN மருத்துவமனை அருகே வசித்து வருகிறார். 2025ம் வருட வாக்கில் PKN மருத்துவமனை அருகே தான் இருந்தார் என்றால் சரிதான். எதற்காக எதிரியின் இரண்டு முகவரியையும் புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரி இரண்டு முகவரியிலும் இருந்ததால் குறிப்பிட்டுள்ளேன். ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் இரண்டு விலாசமும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு அறிவிப்பும் திருப்பப்பட்டது என்றால் சரிதான். ம.ச.ஆ.5ன் படி Door locked என்ற விபரத்தின் படி திருப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி சென்னையில் பணி பார்த்தார் என்றால் இல்லை. சென்னையில் பணி பார்த்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த சமயத்தில் பணம் கொடுத்தேன் என்றால் 20.03.2025 தேதியன்று மாலை 7–8 மணியளவில் பணம் கொடுத்தேன்.

2) ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பமா என்றால் எதிரியின் கையொப்பம்தான். வழக்கு காசோலையின் பின்புறம் K. வைரமுத்து என்று எதிரி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். கையொப்பத்திற்கு கீழே உள்ள எண்கள் மொபைல் எண் 9751034596 என்ன என்றால் ஆம், வைரமுத்துவின் மொபைல் எண்ணாகும். காசோலையில் முன்புறம் மற்றும் பின்புறத்தில் கையொப்பங்களில் "K" ஒரேபோல் உள்ளது என்றால் சரிதான். தொகையில் குறிப்பிட்டுள்ள Lakhs–ல் உள்ள K–விற்கும், கையொப்பத்தில் உள்ள K–விற்கும் வேறுபட்டு உள்ளது என்றால் எதிரிதான் நிரப்பி கொடுத்தார், அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் மட்டும்தான் எதிரியுடையது என்றாலும், அதில் நிரப்பியுள்ள தொகை நான் வேறு நபர் வைத்து நிரப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் நான் ரூ.6,00,000/– ரொக்கமாக வைத்திருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20.03.2025 ல் எதிரி டால்பின் பையர் பைட்டர்ஸ் சென்னையில் உள்ள நிறுவனத்தில் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. **( 20.03.2025 ல் எதிரியின் வருகை பதிவேட்டின் அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது (Marked with objection of learned counsel of complainant )** எ.ம.சா.ஆ.1 ல் உள்ள புகைப்படம் எதிரியின் புகைப்படம் என்றால் சரிதான். புகைப்படத்தில் 20.03.2025, 7.20 A.M மற்றும் 20.03.2025, 6.12 P.M என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

3) சென்னையில் இருந்த காரைக்குடிக்கு வருவதற்கு எத்தனை மணி நேரம் ஆகும் என்றால் சுமார் 6 மணி நேரம் ஆகும். 20.03.2025 ல் எதிரி சென்னையில் பணிபுரிந்தார் என்றாலும், அந்த தேதியில் அவர் காரைக்குடியில் இருந்து பணம் பெற்றதாக தற்போதைய வழக்கில் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தைனிஸ்ராஜ் யார் என்றால் என் தங்கையின் கணவர் ஆவர். வின்னரசி யார் என்றால் என் தங்கை. வழக்கு காசோலை மற்றும் 4 காசோலைகள் என 129,130,160,174,175 எண்களுடைய 5 காசோலைகளை எதிரி தைனிஸ்ராஜ் என்பவருக்கு கொடுத்தார் என்றும், ELFIN நிதிநிறுவனத்தில் முதலீடு தொகையை இரட்டிப்பாக்குவதற்காக எதிரி ஏஜெட்டாக இருந்து தைனிஸ்ராஜ் அதில் 2020 ல் எதிரி மூலமாக ரூ.3,00,000/– முதலீடு செய்தார் என்றாலும், அதில் 1,00,00.0/– முதலீட்டிற்காக தைனிஸ்ராஜ் ரூ2,00,000/– பெற்றுள்ளார் என்றாலும், அதன் பின்பு அந்த நிதிநிறுவனம் மூடப்பட்டுள்ளதால்

பணத்தை திருப்பி பெறுவதற்காக தைனிஸ் ராஜ் எதிரியிடம் இருந்து மேற்கூறிய 5 காசோலைகளை செக்யூரிட்டிக்கா 2020 ல் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலை எனக்கு தரவேண்டிய தொகைக்கான 20.03.2025 ல் 18.06.2025 என பின்தேதியிட்டு என்னிடம் கொடுத்தார்.

4) எதிரி தைனீஸ்ராஜிக்கு 2021 ல் ரூ.50,000/– மற்றும் 2022 ல் ரூ.50,000/– 14.08.2023 ல் ரூ.15,000/– மலேசியாவில் இருந்து தைனீஸ்ராஜின் மனைவி வின்னரசிக்கு, 2024 ல் ரூ.20,000/–மும் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரி தொகைகளை செலுத்திய பின்பு ஒரு காசோலை எண் 160 மட்டும் தைனீஸ்ராஜ் எதிரிக்கு திருப்பி செலுத்தியுள்ளார்ள ன்றால் அது பற்றி எனக்கு தெரியாது. **(எதிரி வைரமுத்துவின் காசோலை 000160 எ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது)** ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் செய்திருந்த எதிரியின் கையொப்பம் மற்றும் செல் எண் போன்றே எ.ம.சா.ஆ.2 ல் உள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 காசோலை கையொப்பம் தவிர வேறு விபரங்கள் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். மீதம் உள்ள 4 காசோலைகளில் 129 எண் கொண்ட காசோலையை 28.01.2025 ல் தைனீஸ்ராஜ் ரூ.5,00,000/– பயன்படுத்தி பவுன்ஸ் ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தைனீஸ்ராஜிக்கு மீதி தரவேண்டிய தொகையில் எதிரி குறிப்பிட்டுள்ளது 65,000/– என்றால் எனக்கு தெரியாது. தைனீஸ்ராஜ் 129 காசோலையை தவறாக பயன்படுத்தியதற்கு எதிரி அவரை கண்டித்தப்பின்பு தைனீஸ்ராஜ் ம.சா.ஆ.1 காசோலை 174 நான் உறவினர்என்பதால் என்னிடம் கொடுத்து என் மூலமாக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்ள ன்றால் சரியல்ல, என்னிடம் இருந்து பெற்ற பணத்திற்கா ம.சா.ஆ.1 வழக்கு காசோலையை எதிரி எனக்கு வழங்கினார்.

5) ம.சா.ஆ.1 காசோலை 174 ற்கு முன்பு உள்ள காசோலைகளான 172, 20.07.2020 ல், 173 21.07.2020 லும் மற்றும் ம.சா.ஆ.1 ற்கு பின்பு உள்ள காசோலைகளான 179, 20.10.2020 தேதியிலும், 180, 22.10.2020 ல் எதிரியால் பயன்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 காசோலை எதிரி 2020 ல் தைனீஸ்ராஜிற்கு கொடுத்த காசோலை

என்றாலும்,அதை நான் எதிரிக்கு எதிராக தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ 2 ல் குறிப்பிட்டுள்ள எதிரியின் தொலை பேசி எண் 2023 ல் தொலைந்து பயன்பாட்டில் இல்லை என்றால் எதிரி அதிக தொலைபேசி எண்கள் மாற்றியுள்ளார். எதிரியின் தற்போதைய செல்போன் எண் தெரியுமா என்றால் ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ல் உள்ள எண்தான் தற்போது வரை தெரியும். நான் வைத்துள்ள எதிரியின் எண்ணில் தொடர்பு கொண்டேனா என்றால் தொடர்பு கொள்ளவில்லை. அதிக தொலைபேசி எண்கள் மாற்றியுள்ளார் என்று கூறியிருக்கும்பட்சத்தில் எந்த எண்கள் மாற்றியுள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 7395947102 என்ற எண்ணைத்தான் 2023 முதல் தற்போது வரை வைத்துள்ளார் என்றாலும்அதைதான் எதிரியின் அரசு ID குறிப்பிட்டுள்ளார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலையில் குறிப்பிட்டுள்ள எண் தான் என்னிடம் உள்ளது. 20.03.2025 ல் எதிரி சென்னையில் வேலை பார்த்தார் என்பதனால் அன்றைய தினம் என்னிடம் பணம் பெற்றார் என்று கூறி தாக்கல்செய்த தற்போதைய வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் பணம் பெற்றுள்ளார். காசோலை எதற்காக திருப்பப்பட்டது என்றால் refer to drawer என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. எதிரி சென்னையில் வேலை பார்க்கிறார்ள என்பதை தெரிந்து அவர் சட்ட அறிவிப்பை பெறக்கூடாது என்பதற்காக அவர் இல்லாத விலாசத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அறிவிப்பு சரியாக சார்பு செய்யவில்லை என்றாலும், அறிவிப்பை பெற்றிருந்தால் எதிரி பதில்அறிவிப்பு கொடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் பெறவில்லை என்றாலும்இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல, என்னிடம் பணம் பெற்றுள்ளார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.10 09:17:20 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.